**செய்தி வெளியீடு எண் : 1377** **நாள் : 05.09.2024**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தல்**

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலுக்கு பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவுக்கு கீழ்க்கண்டவாறு தேர்தல் கால அட்டவணை 06.09.2024 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது: –

| | |
|---|---|
| வேட்பு மனு தாக்கல் செய்தல் | 09.09.2024 (திங்கட்கிழமை) (முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை) |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் | 12.09.2024 (வியாழக்கிழமை) (பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர்) |
| வேட்பு மனு சரிபார்த்தல் | 13.09.2024 (வெள்ளிக்கிழமை) (பிற்பகல் 1.00 மணிக்குள்) |
| வேட்பு மனு திரும்பப் பெற கடைசி நாள் | 17.09.2024 (செவ்வாய்க்கிழமை) (பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர்) |
| வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 18.09.2024 (புதன்கிழமை) |

தேர்தல் அவசியமானால், 19.09.2024 (வியாழக்கிழமை) அன்று ஓட்டுப் பதிவு காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை, தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலகம், நெ.1. ஜாபர்சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–600001–ல் நடைபெறும். 20.09.2024 (வெள்ளிக்கிழமை) அன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும்.

**(வா. சம்பத்)**
தேர்தல் அதிகாரி/ ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu